இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 09 SEPTEMBER-2023 | ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



## வழியருகே வாழ்ந்தவர்கள்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்
WWW.JESUSLIVES.IN

செம்பட்டியில்

செப்டம்பர் 8 வெள்ளிக்கிழமை @10:00Am

# இயேசுவின் பாதத்தில்

இடம் வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்

தொடர்புக்கு
94428 00449, 94980 00449



# ஆசீர்வாத உபவாச ஜெபம்

செப்டம்பர் 9 சனிக்கிழமை @10:00Am

கோவை மாவட்டம்
அன்னூரில்

# எழுப்புதல் உபவாச ஜெப முகாம்

அக்டோபர் 2
காலை 9.30 மணி
திங்கட்கிழமை



Evg.KalaVincentraj Evg.L.Vincentraj

இடம்
C.S.I. சபா மண்டபம்
அம்பாள் பெட்ரோல் பங்க் எதிரில்,
சத்தி மெயின் ரோடு,
அன்னூர்.

# ஆசிரியர் மடல்

**என் ஜனங்களோ வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றினார்கள் எரேமியா 2:11** என்ற வார்த்தையின்படி இந்த பொல்லாத உலகத்தில், கடைசி காலங்களில் வீணாக ஓடி, வீணாக உழைத்து, வீணானவற்றிற்காக தங்கள் மகிமையை மாற்றி, வாழ்கிற ஒவ்வொருவரையும், ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கை வாழத்தான் தேவன் நமக்காக இரத்தம் சிந்தி நம்மை மீட்டுக் கொண்டார். ஆகவே வீணானவைகளை வெறுத்து நலமானவைகளையும், உண்மையானவைகளையும் தேடுங்கள். கடந்த நாட்களில் நடைபெற்ற எல்லாக் கூட்டங்களையும் கர்த்தர் மகிமையாய் நடத்தினார். குறிப்பாக ஆகஸ்ட் 15-ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். தந்தை பெர்க்மான்ஸ் அவர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தி, ஜனங்களை ஆசீர்வதித்தார். தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை மற்றும் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடைபெறும் உபவாச ஜெபங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வழிநடத்தி வருகிறார். வானத்தின் வாசலில் நடைபெறும் எல்லா ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமை மதுரைப் பட்டணத்தில் நடைபெறும் உபவாச ஜெபத்திற்காக நீங்கள் அதிகமாக ஜெபிக்க வேண்டும், இந்த ஜெபத்திற்கு விரோதமாக எழும்பும் எதிர்ப்பின் வல்லமைகளையும் ஆண்டவர் தகர்த்துப் போட வேண்டும். நமது மீடியா மூலமாக ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் கர்த்தருடைய வல்லமை வெளிப்பட வேண்டும். திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.00-9.45 வரை **கர்த்தாவே என்னை கைதூக்கி விடும்** நிகழ்ச்சியும், தினமும் காலை 5.00 மணிக்கு **இயேசுவை தினம் பார்ப்போம்** நிகழ்ச்சியும், ஒவ்வொரு மாதமும் கடைசி நாள் இரவு 10.30-12.30 வரை **நம்பிக்கையின் இரவு** என்ற நிகழ்ச்சியும் ஒளிபரப்பாகிறது. இந்த நிகழ்ச்சிகள் அநேக ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க ஜெபித்துக் கொள்ளுங்கள். எங்கள் குடும்பத்திற்காகவும், இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து இரவும் பகலும் உழைக்கிற எல்லாருக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் ஏறக்குறைய 35 வருடமாக நடைபெறும் **திருப்பத்தூர் பரிசுத்த உபவாச முகாம்** ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1,2-ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. 70-ஆவது பரிசுத்த உபவாச முகாமில் நீங்கள் எல்லாரும் கலந்து கொள்ள பிரயாசப்படுங்கள். ஆண்டவராகிய தேவன் நம்மை ஆசீர்வதித்து நடத்துவாராக.



இயேசுவின் பணியில்,

L. Vincentraj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)



# வழியருகே வாழ்ந்தவர்கள்


சகோ. L. வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நாம் இந்த உலகத்தில் இயேசுவுக்காக, கிறிஸ்துவுக்காக வாழ்கிற வாழ்க்கை விலையேறப்பெற்றது. தேவன் இந்த பூமியில் மேன்மையான வாழ்க்கைக்கும், உன்னதமான வாழ்க்கைக்கும்தான் நம்மை அழைத்திருக்கிறார். அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டிய நாம் இன்றைக்கு எந்த ஒரு முன்னேற்றமும், வளர்ச்சியும் இல்லாமல் அப்படியே இருக்கிறோம். இன்றைக்குக் காரியம் நடந்தால் போதும், தேவைகள் சந்திக்கப்பட்டால் போதும் என்று ஓடிக் கொண்டிருக்கிறோம்.


தேவன் நம்மை அவரோடு வாழவும், அவருக்குப் பிள்ளைகளாய் இருக்கவும் அழைத்திருக்கிறார் லூக்கா 15:31-ல் சொல்லப்பட்டுள்ள வார்த்தையின்படி மகனே நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கும் என்ற வாழ்க்கைக்கு தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நாம் அதை சுதந்தரித்து, அவர் ஏற்படுத்திய ஆசீர்வாதத்தை அனுபவிப்பதற்குப் பதிலாக இன்னும் பரதேசிகளும், பிச்சைக்காரர்களுமாய் இருந்து,

அவருடைய வாக்குத்தத்தங்களுக்கும், ஆசீர்வதங்களுக்கும் அந்நியராயிருந்து அதை அனுபவிக்க முடியாமல் வெறுமையோடும், வேதனையோடும் இருக்கிறோம். இப்படியாகத்தான் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலே அடிமைத்தனமாய், வெறுமையாய் எவ்வளவு வேலை பார்த்தும் கூலி இல்லாமல், அடிமைத்தன வேதனையோடு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். காரணம் வழியருகே உள்ள மரம் போல போவார், வருவார் எல்லாரும் கல்லெறிந்து, பாதிக்கப்பட்டு கனி கொடாத மரம் போல் இருந்தார்கள். இப்படி வழியருகே வாழ்ந்தவர்களைத் தோட்டத்தில் நாட்டவும், கொத்தி எருப்போடவும் ஆண்டவராகிய தேவன் அவர்களை நிலைநாட்டச் சித்தங்கொண்டார். இந்த வழியருகே உள்ள வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், அதற்கு முடிவு கட்டவும் தேவன் திருவுளம் கொண்டார். இதைத்தான் அப்போஸ்தலர் 3-ஆம் அதிகாரத்தில் பார்க்கிறோம். 2 முதல் 7 வரையுள்ள வசனங்களில் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்து கொண்டு வந்து தேவாலயத்திலே பிரவேசிக்கிற, வருவோர், போவோர் எல்லாரிடமும் பிச்சை கேட்கும்படி நாடோறும் அலங்கார வாசலண்டையில் வைத்தார்கள். அவனுடைய வேலை தேவாலயத்திற்குச் சென்று தேவனை ஆராதிப்பதோ அல்லது தொழுது கொள்வதோ அல்ல வாசல் அருகில், வழியருகே உட்கார்ந்து பிச்சை எடுப்பதும், பிச்சை கேட்பதும், அதைக் கொண்டு போய் தன் வீட்டிலே கொடுத்தால் தான் அவனுக்கு சாப்பாடும், தண்ணீரும், தங்க இடமும் உண்டு. இல்லை என்றால் அவன் நிலை பரிதாபம், ஒன்றும் கிடைக்காது. இதற்காகவே அவனை கடைத்தெருவிலோ அல்லது ஜனங்கள் கூடுகிற திருவிழாவிலோ கொண்டுப்போய் வைக்காமல் ஆலயத்தில் வாசலண்டையில், வழியருகே வைத்து உள்ளே போகிறவர்கள் கொஞ்சம் இரக்கப்பட்டு உதவி செய்து ஆதரிப்பார்கள், அதை வைத்துப் பிழைத்துக் கொள்ளலாம் என்று தான் அங்கே கொண்டுப் போய் வைத்தார்கள். நடந்தது என்ன வழியருகே அமர்ந்து பிச்சை கேட்ட அவனைப் பேதுருவும், யோவானும் கண்டு, அவனை உற்று நோக்கி, இங்கே பார் வெள்ளியோ, பொன்னோ பணமோ, எங்களிடத்தில் இல்லை, என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்று சொல்லி வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கி விட்டார்கள்.

ஏறக்குறைய 40 வயது நிரம்பிய அவனது, 40 வருட வழியருகே அமர்ந்திருந்த வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்கள். அப் 4:22-ல் அற்புதமாய் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷனுக்கு வயது நாற்பது என்று வேதம் சொல்லுகிறது. நாற்பது வருஷம் பிச்சை வாழ்வுக்கு, வழியருகே வாழ்ந்த வாழ்க்கைக்கு, பிறர் உதவியை எதிர்பார்த்து, மற்றவர்களை சார்ந்தே வாழ்க்கை நடத்தின அவனுக்கு, வழியருகே வெயிலும், பனியும், குளிரும் நிறைந்த அந்த வாழ்க்கைக்கு, சில சமயங்களில் அவனை தூக்கி வந்தவர்கள் இறக்கி வைக்கும் போது எத்தனையோ முறை தவறுதலாய் கீழே சாய்த்து அதனால் பல பாதிப்புகள், காயங்கள் உண்டாயிருக்கலாம். அவன் நினைத்த நேரத்தில் வர முடியாமல், சில சமயம் ஆலய ஆராதனை எல்லாம் முடிந்து, எல்லாரும் போன பின்பு அவனை அங்கே உட்கார வைத்தால் என்ன வருமானம் கிடைக்கும், யார் பிச்சை போடுவார்கள். இப்படி பல சங்கடங்களை அனுபவித்திருப்பான். இப்படிப்பட்ட எல்லா வாழ்க்கைக்கும், நிலையற்ற வாழ்க்கைக்கும் தேவன் ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.



வழியருகே உள்ள அவனைத் தேவாலயத்திற்குள்ளே போகும்படியாகவும், தேவனைத் தொழுது கொள்ளும்படியாகவும், ஆராதிக்கும்படியாகவும், வெளியே இருந்த வாழ்க்கையை உள்ளே, அதாவது கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தார்கள். வேதம் சொல்லுகிறது **ஆதி 24:31-ல் அப்பொழுது அவன் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே உள்ளே வாரும், நீர் வெளியே நிற்பானேன்?** என்று ஈசாக்குக்கு பெண் பார்க்க ஆபிரகாம் எலியேசரை அனுப்பும் போது பெத்துவேல் சொன்னது போல, இதுவரை சப்பாணியாய், பிச்சைக்காரனாய், வழியருகே வாசலிலே வாழ்ந்தவனுக்கு இப்பொழுது ராஜமேன்மையும், உயர்வும் ஒரே நாளில் வந்தது.



இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்று பேதுருவும், யோவானும் சொன்ன போது அவன் எழுந்து, துள்ளி குதித்து தேவனை மகிமைப்படுத்தி, தேவனைத் துதித்துக்கொண்டே அவர்களுடனே தேவாலயத்திற்குள் பிரவேசித்தான் என்று அப் 4:8 அப்படிச் சொல்லுகிறது.

அவன் நடக்கிறதையும், தேவனைத் துதிக்கிறதையும் ஜனங்கள் எல்லாரும் கண்டு ஆச்சரியப்பட்டுத் தேவனை மகிமைப்படுத்தினார்கள். நாற்பது வருட பிச்சைக்கார வாழ்க்கைக்கு, வழியருகே வாசலில் காத்திருந்த வாழ்க்கைக்கு, ஒரே நாளில், ஒரே நிமிடத்தில் கனி கொடுக்கிற வாழ்க்கையாக, தேவனுடைய ஆலயத்தில் நாட்டப்பட்ட மரமாக மாறியது.

**சங் 92:13-ல் கர்த்தருடைய ஆலயத்தில் நாட்டப்பட்டவர்கள், எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்** இதுவரை தேவனுடைய ஆலயத்தில் நாட்டப்படாமல் பரதேசியாய், திக்கற்றவனாய் இருந்த அவனை, வழியருகே வாழ்ந்த அவனை, ஆலயத்திற்கு உள்ளே தேவமகிமையிலே, தேவ பிரசன்னத்திலே கொண்டுபோய் சேர்த்தார்கள்.

இன்றைக்கு யார் யார் எல்லாம் இந்த செய்தியை வாசித்து தன் வாழ்க்கையைத் தேவனுக்கு அர்ப்பணித்து, இதுவரை வழியருகே, தேவாலயத்திற்கு வெளியே, தேவ பிரசன்னத்திற்கு வெளியே வாழ்ந்து, என் வாழ்க்கையை நானே வீணடித்து, பிச்சைக்காரனைப் போல தேவனுடைய ராஜ்யத்தில் அந்நியனைப் போல வாழ்ந்து கொண்டு வந்தேன், என்னை மன்னிக்க வேண்டும் தேவனே, எனக்கு இரங்கும் என்கிறார்களோ அத்தனை பேருக்கும் தேவன் இரக்கம் காட்ட, தயவு காட்ட இன்றைக்கும் இரக்கமுள்ளவராக இருக்கிறார். இயேசு சொன்னார் **யோவான் 10:16-ல் இந்த தொழுவத்திலுள்ள வைகளல்லாமல், வேறே ஆடுகளும் எனக்கு உண்டு, அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும், கூட்டிச் சேர்க்க வேண்டும்.**


தேவாலயத்திற்கு வெளியே தேவனை விட்டு, அவருடைய பிரசன்னத்தை விட்டு எத்தனை பேர் வாழ்கிறார்களோ அத்தனை பேரும் உள்ளே வரவும், நிலைநாட்டப்படவும், அவர்கள் அலைச்சலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் தேவன் கிருபையுள்ளவராக இருக்கிறார். **2 சாமு 7:10-ல் நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன் போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் நியாயதிபதிகளைக் கட்டளையிட்ட நாள் வரையில் நடந்ததுபோலும் நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கும்படி அவர்களை நாட்டினேன் என்றார்.** அவர்களை நான் நட்டு வைத்தேன் இனி அவர்கள் அலையாமல், பிச்சை எடுக்காமல், பணப்பற்றாக் குறையோடு வாழாமல், வழியருகே உள்ளவர்களாய்

ஜீவிக்காமல் அவர்களை என் தொழுவத்திற்குள் கொண்டு வருவேன், பலனற்ற வாழ்க்கைக்கு, கனியில்லாத வாழ்க்கைக்கு, பிச்சை எடுக்கிற வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பேன் என்றார்.

இனி தேவனுடைய ஆலயத்தில் நாட்டப்பட்டவர்களாக, கனி கொடுக்கிறவர்களாக மாற்றி, உலர்ந்து போன, பட்டுப் போன வாழ்க்கையை தேவன் சரி செய்வார். இனி வழியருகே இருந்து விசாரிப்பற்ற மரமாக இல்லாமல், தானியமும், திராட்சைரசமும், களஞ்சியமும் நிரம்பி இருக்கும்படி தேவன் செய்வார். போகட்டும் யார் யார் எப்படி எல்லாம் வழியருகே இருந்து வாழ்ந்து, என்ன தோல்வி, வேதனை அனுபவித்தார்கள், தேவன் அவர்களை எப்படி மாற்றினார் என்பதைப் பார்க்கப் போகிறோம்.

## வழியருகே இருந்த அத்திமரம்


**அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற்குப் போய் அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல் இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார். உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று மத் 21:19.** இயேசுவின் ஊழிய நாட்களில் கிராமங்கள் தோறும், பட்டணங்கள்தோறும் அலைந்து, நடந்து, நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார். பிசாசின் வல்லமையில் அகப்பட்ட ஒவ்வொருவரையும் குணமாக்கி அற்புதங்களைச் செய்தார். இப்படிபட்ட வேளையில் அவருக்கு பசியுண்டாயிற்று, அப்பொழுது தான் அந்த அத்திமரத்தைப் பார்க்க நேர்ந்தது. அது பச்சையாகவும், பார்ப்பதற்கு கண்கொள்ளாத



காட்சியாகவும் இருந்தது. நடந்தது என்ன தெரியுமா? மாற்கு 11:13-ல் அதில் ஏதாவது அகப்படுமா என்று பார்த்தார் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை, பசியைத் தீர்க்காத மரங்களும், தாகத்தைத் தணிக்காத நீறுற்றுகளுமாய் இருந்தது. வெளித் தோற்றத்திற்கு அழகாக, அருமையாக, பச்சையாக மற்றவர்கள் பார்வைக்கு உயிருள்ள மரமாகவோ, காய்ந்த மரமாகவோ, பட்ட மரமாகவோ காணப்படாமல் செழிப்பாய், உயர்வாய் காணப்பட்டது. தனக்கு தானே கனிக் கொடுக்கிறது போல, தன் பார்வைக்கு நல்ல மரமாக இருந்தது **ஓசியா: 10:1-ல் இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத் தானே கனிக்கொடுக்கிறது** என்ற வார்த்தையின்படி தன் பார்வைக்கு நல்ல மரமாக கனிகொடுப்பதைப் போல் இருந்தாலும் மற்றவர்கள் பசியை போக்கவோ, மற்றவர்களுக்காக பரிதவிக்கவோ இல்லை. இயேசுவின் பசியைப் போக்காத, விருப்பத்தை, சித்தத்தை நிறைவேற்றாத அத்திமரமாயிருந்தது, அதனால் அது சபிக்கப்பட்டுப் போயிற்று. அது மட்டுமல்ல தேவன் அதை வைத்த இடத்தில் இல்லாமல், அது நகர்ந்து போய் தோட்டத்திற்குள் இல்லாமல், வழியருகே நின்று போவார், வருவார் எல்லாரும் தன்னைப் பார்க்கவும், தன்மேல் கல்லெறியவும், பிடுங்கவும், பறித்து கொள்கிற இடத்தில் இருந்தது.

இன்றைக்கு வழியருகே உள்ள மரமும், வழியருகே விழுந்த விதையும் ஒரு நாளும் பலன் தராது ஏன் தெரியுமா? அதற்கு பாதுகாப்பு இல்லை, தண்ணீர் பாய்ச்ச முடியாது, கொத்தவோ, எருப் போடவோ முடியாது, பரிந்து பேசவோ, இன்னும் இந்த வருஷம் இருக்கட்டும் என்று சொல்லவோ முடியாத இடத்தில் இருந்தது.

வேதம் சொல்லுகிறது **எரேமியா 2:21-ல் நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச் செடியாக நாட்டினேன், நீ எனக்குக் காட்டுத் திராட்சச் செடியின் ஆகாதக் கொடிகளாய் மாறிப்போனது என்ன? என்றார்.** உயர்குல மக்களாக, பரிசுத்த ஜாதியாக, அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு நம்மை அழைத்தார். ஆனால் ஆகாத காட்டுச்செடியாக கசப்பாகவும் மாறிவிட்டது. இதைப்பற்றி ஏசாயா 5:2-ல் அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்களைப் பொறுக்கி, அதிலே நற்குல செடிகளை நட்டு, அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக் கட்டி, அதிலே ஆலையை உண்டு பண்ணி அது நல்ல திராட்சப் பழங்களைத் தருமென்று காத்திருந்தார். அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது.




அதாவது தேவனை ஏமாற்றி, அவர் விருப்பத்தை நிறைவேற்றாமல் போனதால் தேவன் துக்கமடைந்தார், அதைக் குறித்து வியாகுலப்பட்டார். ஏன்? நான் நாட்டின, வைத்த இடத்தை விட்டு போனது, ஏன்? என்னை விட்டு அகன்று, வழியருகே சென்றது அதை இதற்காகவா நாட்டினேன் என்றார். **சங்கீதம்: 80:8,9-ல் நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக் கொடியை கொண்டு வந்தீர், ஜாதிகளைத் துரத்தி விட்டு அதை நாட்டினீர் அதற்கு ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணினீர், அது வேரூன்றி தேசமெங்கும் பரவியது, படர்ந்தது.**

அப்படிப்பட்ட உயர்குலத் திராட்சைச் செடியாக இருக்கவும், கனி கொடுக்கவும், பசியை போக்கவும் உண்டாக்கப்பட்ட மரம் கனி கொடுக்காமல் போய்விட்டது. அது நகர்ந்து வழியருகே மிதிக்கப்படவும் மற்றவர்கள் பார்வையில் காணப்படவும் தன்னை மறைத்துக் கொள்ளாமல், தேவனுக்குள் ஒளித்துக் கொள்ளாமல் மறைந்து வாழாமல் தான் செய்கிறதை எல்லாம் மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டது.

ஆண்டவராகிய தேவன் ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்தபோது தன்னுடைய இருப்பிடத்தில், தான் உலாவுகிற இடத்தில், ஏதேன் தோட்டத்தில் தான் அவர்களை வைத்தார், அதைக் காக்கவும், பண்படுத்தவும் அவர்களை ஏற்படுத்தினார் ஆதி 2:15-ல் அப்படி சொல்லுகிறது. ஆனால் அவர்களோ தேவன் வைத்த இடத்தில் இல்லாமல் தனக்குப் பிடித்தமான இடத்திற்கு நகர்ந்து, தேவனை விட்டுவிலகி நாடோடிகளாய், பரதேசிகளாய் வழியருகே நிற்கிற மரங்களாய் தோட்டத்திற்குள் உள்ளே இருந்த அவர்கள் வெளியே துரத்தப்பட்டு கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு தங்களை உட்படுத்திக் கொண்டார்கள்.

வழக்கம் போல் பகலின் குளிர்ச்சியான நேரத்தில் ஆண்டவர் வந்து தோட்டத்தில் பார்த்தபோது அவர்கள் இருவரையும் காணவில்லை. ஆதாமே எங்கே இருக்கிறாய் ஏன்? என்னை விட்டு அகன்று, விலகிப் போனாய். நான் உன்னை உயர்குல செடியாக என்னுடைய பாதுகாப்பிற்குள் வேலியடைத்து அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி, சுத்தம் செய்து கொத்தி எருப்போட்டு, களையெடுத்து, கனி கொடுப்பாய் என்று மிகுந்த ஆவலோடு இருந்த எனக்கு இப்படி ஏமாற்றி துரோகம் செய்து விட்டாயே என்று அங்கலாய்த்தார். காரணம் அந்த அத்தி மரம் தோட்டத்திற்குள் இல்லை, தோட்டத்திற்கு வெளியே தண்ணீர் பாய்ச்ச முடியாத இடத்திலும், வழியருகே உள்ள மரமாக மாறிவிட்டது. வேலியை தகர்த்து பாதுகாப்பில்லாத இடத்திற்கு சென்றுவிட்டது. அதனால் அந்த மரத்தை பாதுகாக்கவோ, பரிந்துபேசவோ முடியவில்லை. இதைத் தான்

லூக்கா: 13:7-9 வசனங்களில் பார்க்கிறோம். **இதோ மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன் ஒன்றையும் காணவில்லை இதை வெட்டிப்போடு, இது நிலத்தை ஏன் கெடுக்கிறது என்றார். அதற்கு தோட்டக்காரன் ஐயா இந்த வருஷமும் இருக்கட்டும் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன் என்றார்.** ஏன் என்றால் அந்த அத்திமரம் தோட்டத்திற்குள் இரக்கத்தைப் பெறுகிற இடத்திற்குள், பரிந்துபேசி ஜெபிக்கிற இடத்திற்குள் இருந்தது. அதனால் அது தப்பி இந்த வருஷமும் இருக்கட்டும் என்று தண்ணீர் பாய்ச்சுகிற இடத்தில் கொத்தி எருப்போடுகிற இடத்தில் இருந்தது. அதனால் இன்னும் கனி தருவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. மறுபடியும் தேவனுக்குள் மறைக்கப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு சென்றது. அது சபிக்கப்படவோ, கெட்டுப் போவதற்கோ வாய்ப்பில்லாமல் இருந்தது. எபி 6:7 சொல்லுகிறது எப்படியெனில், தன் மேல் அடிக்கடிப் பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற் கேற்றதாயுமிருக்கிறது, சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு என்று சொல்லப்பட்டுள்ளது. இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே  நாம் எங்கே இருக்கிறோம்?



கர்த்தருடைய தோட்டத்திலா அல்லது இடம் மாறி, பெயர்ந்து வழியருகே நின்று கொண்டிருக்கிறோமா?, நாம் தண்ணீர்களுள்ள இடத்தில் இருக்கிறோமா? நம்மைச் சுற்றிலும் வேலியடைக்கப்-பட்டிருக்கிறதா?, கொத்தி எருப்போடுகிற இடத்தில் இருக்கிறோமா? அல்லது உணர்வு இல்லாத இடத்தில் இருக்கிறோமா?. நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது, இதுவரை நாம் எப்படி இருந்தாலும் பரவாயில்லை இனி நாம் கனி கொடுக்கவும், பலன் கொடுக்கவும், தேவன் விரும்புகிறார். அவர் பசியைப் போக்கவும், தாகத்தை தணிக்கவும் விரும்புகிறார். மற்றவர்களுக்கு நீதிமானாக, நல்லவனாக, பட்டுப்போகாத இலை நிறைந்த மரமாக வாழ்ந்தது போதும் இனி கர்த்தருக்கு கனி கொடுக்கிற வர்களாக வாழ நம்மை அர்ப்பணிக்க வேண்டும். தேவனுடைய ஆசீர்வாதத்தை இழந்து வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்த பர்த்திமேயு என்ற மனிதனைப் போல் பிச்சைக்கார வாழ்க்கைக்கும், குருட்டு வாழ்க்கைக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்து மாற்கு 10:46-52 முடிய உள்ள வாழ்க்கையைப் போல நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்து நம்முடைய எஜமானுக்கு கனி கொடுக்கிறவர்களாகவும், அவருக்கு பலனை கொடுக்கிறவர்களாகவும் வாழ நம்மை அர்ப்பணிப்போம். கிருபையானது நம் அனைவரோடும் இருப்பதாக.

# ஆசீர்வாத உபவாச ஜெபம்












கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஆகஸ்டு 15-ஆம் தேதி நமது வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து நடைபெற்ற ஆசீர்வாத உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். ஜெபத்தின் ஆரம்பம் முதல் முடிவு மட்டும் தேவ ஆவியானவர் பலமாய் செயல்பட்டு வந்த ஒவ்வொருவரையும் தொட்டார். சகோதரி. கலா வின்செண்ட்ராஜ் அவர்கள் பாடல் ஆராதனையை நடத்தி மக்களின் இருதயத்தை தேவன் பக்கமாய் திருப்பி, அவர்கள் இருதயத்தில் இருக்கும் காயங்களுக்கு மருந்தாக பாடல்கள் மூலம் ஆறுதல் அடையச் செய்தார்கள். சகோதரர். வின்செண்ட்ராஜ் அவர்கள் ஆராதனையை நடத்தி ஜனங்களை தேவ பிரசன்னத்திற்குள் நடத்தினார்கள் அநேகருடைய கட்டுகள் உடைந்தது, தேவமகிமைக்குள்ளாக ஒவ்வொருவரையும் நிரம்பச் செய்தார்கள். தேசத்திற்காக, அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காக, ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக, ஆளுகையில் உள்ளவர்களுக்காக ஜெபங்களை ஏறெடுத்தார்கள். மேலும் எங்களுடைய ஊழியத்தின் இலக்கான ஒவ்வொரு மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா என்ற நோக்கத்தின் மூலம் ஜெபத்திற்கு புதிதா வந்திருந்த ஒவ்வொருவருக்கும் வேதாகமத்தை பரிசாக அளித்தார்கள். தொடர்ந்து தந்தை பெர்க்மான்ஸ் அவர்களைக் கொண்டு நம்மைக் காண்கிற தேவன் என்ற தலைப்பில் ஜெபத்திற்கு வந்திருந்த ஒவ்வொருவரோடும் தேவன் பேசினார், ஜனங்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையையும், கட்டுகளிலிருந்து விடுதலையையும், சரீரத்தில் சுகத்தையும் பெற்றுச் சென்றார்கள். தந்தை அவர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார். மேலும் ஜெபத்திற்கு வந்திருந்த அத்தனை பேருக்கும் ஆவிக்குரிய உணவு மட்டுமல்ல சரீரப்பிரகாரமான உணவும் கொடுக்கப்பட்டது. தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது இந்த ஊழியத்திற்காக ஜெபித்த, உழைத்த, கொடுத்த அனைவரையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக.





# எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்கிற கர்த்தர்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள்!. **என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் 1 ராஜா 1:30.** தாவீது ராஜா பத்சேபாளுக்கு ஆணையிட்டுக் கொடுத்தபடியே மகன் சாலமோனை ராஜாவாக ஏற்படுத்துவேன் என்று சொல்லி என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தர் என்கிறார். தாவீது சந்தித்த இக்கட்டுகள் ஏராளம். சிறியவனாய் இருக்கும்போது வனாந்திரத்துக்கு தாய் தந்தையாலேயே அனுப்பி வைக்கப்பட்டவன்.


என் வாழ்க்கையே இவ்வளவு தானா? இந்த காட்டிலேயே முடிந்து போகப்போகிறதா? நன்மையின் நாட்களை நான் காண்பேனா? பலவிதமான கேள்விகள் அவனில் எழும்பும் போதெல்லாம் கர்த்தர் என் மேய்ப்பர் நான் தாழ்ச்சியடையேன் என்று சொல்வான். சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும் என்பான்.

**சங் 116:3-ல் மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக் கொண்டது, பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது** இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன் என்று சொல்லுகிறான். நம் வாழ்க்கையில் கூட தாவீதைப் போல பல இக்கட்டுகளை சந்தித்துக் கொண்டு இருக்கலாம், தாவீதை எல்லா

இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தர் நம்மையும் விடுவிப்பார். காட்டிலிருந்து நாட்டிற்கு கொண்டு வருகிற மாதிரி இருக்கும். ஆனாலும் திரும்பவும் வனாந்திர வாழ்க்கை வழியாக கடந்து போனான். ஒருமுறை இரண்டு முறை அல்ல, பலமுறை அவன் அனாதை போல வனாந்திரத்தில் அலைந்தான். சொந்தங்களால் வந்த இக்கட்டுக்கள், மாமன் சவுல், மகன் அப்சலோம், பெலிஸ்தியரால் வந்த இக்கட்டுகள், எத்தனை நாட்டவர்களோடு யுத்தம், கொஞ்சம் நிம்மதியாய் இருப்போம் என்று நினைத்தான், ஆனால் ஆத்துமாவை மரணத்துக்குள்ளாக்கும் விபச்சாரத்தில் விழுந்தான்.


அவன் வாழ்க்கையில் ஜனங்களை எண்ணி தொகைப் பார்த்து அதில் ஒரு பெருமை, எவ்வளவு பேர் இருக்காங்க என்று அதில் ஒரு போராட்டம் இது சாத்தானின் தூண்டுதலால் வந்தது. அத்தனை போராட்டங்களில் இருந்தும் கர்த்தரே என்னை நீங்கலாக்கி விடுவித்து காத்தார் என்கிறான் **2 சாமு 24:14-ல் கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன், இப்பொழுது நாம் கர்த்தருடைய கைகளில் விழுவோமாக அவருடைய இரக்கங்கள் மகா பெரியது. மனுஷர் கையில் விழாதிருப்பேனாக என்றான்.** கொடிய இடுக்கண் வந்த போது தாவீது கர்த்தரின் கையிலேயே விழுந்தான். நீங்கபார்த்து ஏதாவது செய்யுங்க என்றான், மூன்று தண்டனையில் எதை தேர்ந்தெடுப்பது தெரியவில்லை. ஏழு வருஷம் பஞ்சம் வேணுமா?, மூன்று நாள் கொள்ளை நோய் வேணுமா?, மூன்று மாதம் எதிரிகளால் துரத்தப்பட வேணுமா? என்று தீர்க்கதரிசியின் மூலம் தேவன் சொல்லி அனுப்பினார். ஏழு வருஷம், மூன்று மாதம், மூன்று நாள் என்று இருக்கிறதிலேயே சின்ன தண்டனை கொடுத்து சீர்ப்படுத்தினார். 17-ஆம் வசனத்தில் இதோ, நான்தான் பாவஞ்செய்தேன், நான் தான் அக்கிரமம் பண்ணினேன், இந்த ஆடுகள் என்ன செய்தது என்று மனம் வருந்தி தன்னைத் தாழ்த்தினதும் தேவ கோபம் விலகிப்போனது. அந்த தேவன் நமக்கும் ஜெயம் தருவார். காரணம் தாவீதுக்கு என்ன கிருபை கொடுத்தேனோ அதே கிருபையை நான் உனக்கும் கொடுப்பேன் என்றார். பாவத்தினால், பொல்லாத மனிதர்களால், சாத்தானால் இக்கட்டுகளில் சிக்கித் தவிக்கிற நம்மை தேவன் விடுதலையாக்குவார்

எலிகூ யோபுவுக்கு உணர்த்துகிறான், யோபு 34:31-33-ல் நான் தண்டிக்கப்பட்டேன், நான் இனிப் பாவஞ் செய்யமாட்டேன், நான் காணாத காரியத்தை நீர் எனக்குப் போதியும், நான் அநியாயம் பண்ணினேனானால் நான் இனி அப்படிச் செய்வதில்லை என்று தேவனை நோக்கிச் சொல்லத்தகுமே, நீர் அப்படிச் செய்யமாட்டோமென்கிறபடியினால், உம்மோடிருக்கிறவர்களில் ஒருவனை உமக்குப் பதிலாக அதைச் செய்யச் சொல்வீரோ, அல்லவென்றால் நீர் அறிந்திருக்கிறதை சொல்லும் என்றான். தண்டனை வரும் போது இனிப் பாவம் செய்யமாட்டேன். நான் அநியாயம் பண்ணினால் இனி அப்படிச் செய்வதில்லை என்று தேவனை நோக்கி கெஞ்சு. நீர் அப்படி செய்யாமல் உம்மோடிருக்கிற ஒருவர் உமக்குப் பதிலாக செய்யச் சொல்வீரோ? தன் பாவத்தை தான்தான் அறிக்கை செய்யணும் என்று அவன்



பேசினான் பின்பு, கர்த்தர் பேசினார் உடனே உணர்வுள்ளவனாகி தூளிலும், சாம்பலிலும் உட்கார்ந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான். அறிவில்லாமல் ஆலோசனையை அபத்தமாக்கினது நான் தான். அலப்பிட்டேன் என்று தாழ்த்தின உடனே எல்லா இக்கட்டுகளும் மாறிப்போனது.

ஒரு இக்கட்டு வந்த உடனே உங்களைத் தாழ்த்தி தேவனிடத்திலேயே ஓடுங்கள். ஐயோ, நான் ஜெபம் பண்ணிக் கொண்டு தானே இருக்கிறேன், ஏன் எனக்கு இப்படி நடக்குது என்று கேட்காதீங்க. யாத் 5:19-ல் நீங்கள் ஒவ்வொரு நாளிலும் அறுத்துத் தீர வேண்டிய செங்களிலே ஒன்றும் குறைக்கப்படாது என்று சொல்லப்பட்டதினாலே, இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்களுக்கு இக்கட்டு வந்தது என்று கண்டார்கள். நீங்கள் சோம்பலாயிருக்கிறீர்கள் அதனால் தான் ஜெபம், ஆராதனை, பலியிட வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். இனி உங்களுக்கு வைக்கோல் கொடுக்கப்பட மாட்டாது, தினமும் நீங்கள் அறுக்க வேண்டிய செங்கலும் குறைக்கப்பட மாட்டாது என்றதும் ஐயோ நமக்கு இக்கட்டு வந்தது என்று மோசேயோடும், ஆரோனோடும் சண்டை போட்டார்கள். இன்னும் நான் எதில் தவறி விட்டேன் எனக்கு காண்பியும் என்றால் ஆண்டவர் நம்மோடு பேசுவார். அதைக் கேட்காமல் இஸ்ரவேலர் சண்டை பண்ணினார்கள். நம் காரியம் என்ன என்று அதை உணர்ந்து அறிக்கையிட்டு அர்ப்பணியுங்கள். இனி இப்படி செய்ய மாட்டேன் என்று தாழ்த்துங்கள் இரக்கம் பெறுவீர்கள்.



## கர்த்தர் யார்?

அவர் நல்லவர். நாகூம் 1:7 கர்த்தர் நல்லவர். இக்கட்டு நாளிலே அரணான கோட்டை. தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். சங் 37:39-ல் நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும். இக்கட்டு காலத்திலே அவரே அவர்கள் அடைக்கலம். சங் 32:7-ல் நீர் எனக்கு மறை விடமாய் இருக்கிறீர். என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளும்படி செய்கிறீர்.

கர்த்தர் நல்லவர், அவர் நமது அடைக்கலம், அவர் நமது மறைவிடம், தம்மை நம்புகிறவர்களை அவர் அறிந்திருக்கிறார். இக்கட்டுக் காலத்திலே அவரே நமது அடைக்கலம். இக்கட்டுகள் சூழ்ந்திருக்கும் போது அவர் அதற்கு நம்மை மறைத்து இரட்சண்யத்தால் பாடல்கள் நம்மை சூழ்ந்து கொள்ளச் செய்கிறார். எனவே மனம் கலங்காதிருங்கள். அவர் நம்மை இந்த இக்கட்டுகளுக்கு நீங்கலாக்கி காப்பாற்றி மீட்க வல்லவர்

## நாம் என்ன செய்ய வேண்டும்?

தாவீதைப் போல ஜெபம் பண்ண வேண்டும். சங்கீதம் 141:5-ன் பின் பகுதியில் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம் பண்ணுவேன். சங் 60:11-ல் இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும். மனுஷனுடைய உதவி விருதா! என்று சங்கீதக்காரன் ஜெபிக்கிறான். இக்கட்டு அதிகரிக்கும் போது நாம் ஜெபம் பண்ண

முடியாமல், அல்லது ஜெபம் பண்ணியும் இன்னும் பிரச்சனை தீர வில்லையே என்று ஜெபம் பண்ணாமல் போகிறோம், ஜெபம் பண்ணுவதை நிறுத்திவிடுகிறோம். ஆனால் இந்த சங்கீதக்காரன் இக்கட்டு நாளில் நான் இன்னும் ஜெபம் பண்ணுவேன் என்கிறான். சங் 34:6-ல் இந்த ஏழை கூப்பிட்டான் கர்த்தர் அதைக் கேட்டு அவனை அவன் இடுக்கண்களுக் கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.

சங். 71:20,21-ல் அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னை பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர். என் மேன்மையைப் பெருகப்பண்ணி என்னை மறுபடியும் தேற்றுவீர். ஏசா 33:2-ல் கர்த்தாவே எங்களுக்கு இரங்கும். உமக்கு காத்திருக்கிறோம். தேவரீர் காலையில் அவர்கள் புயமும், இக்கட்டு காலத்தில் எங்கள் இரட்சிப்புமாயிரும் என்று ஏசாயா ஜெபிக்கிறார். நெகே 9:36,37 அதிகாரம் முழுவதும் ஜெபம் தான் பலனையும், நன்மையையும் அனுபவிக்கும் தேசத்திலே தானே நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம். பின் பகுதியில் வசனம் 37 நாங்கள் மகா இக்கட்டில் அகப்பட்டிருக்கிறோம். நெகேமியா தனக்காகவும் தம் ஜனங்களுக்காகவும் உட்கார்ந்து, அழுது, உபவாசித்து ஜெபித்ததைப் பார்க்கிறோம்.

சங் 107:6, 13, 19, 28-ல் இஸ்ரவேலர் தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர் அவர்களை விடுவித்தார். சங் 25:22 தேவனே இஸ்ரவேலை அவனுடைய எல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி மீட்டு விடும் என்கிறான். யோனா 2:2-ல் மீனின் வயிற்றிலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். அவர் எனக்கு உத்தரவு அருளினார், நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன். நீர் என் சத்தத்தை கேட்டீர் என்கிறான்.



## நாம் விசுவாசிக்க வேண்டும்.

ஆபகூக் 3:16 இக்கட்டு நாளில் இளைப்பாறுதல் அடைவேன். ஆவிக்குரிய யுத்தம் நடக்குது. ஆனாலும் இக்கட்டு நாளில் இளைப்பாறுதல் அடைவேன் என்ற விசுவாசம் நமக்கு வேண்டும். சூழ்நிலைகள் நமக்கு எதிர் மறையாகவே இருக்கும். நம்மால் விசுவாசிக்க முடியாததாய் இருக்கும். நான் இந்த இக்கட்டில் இளைப்பாறுதலை பெறுவேன், நன்மையை காண்பேன் என்று நம்பினால் நிச்சயம் நன்மையைக் காண்போம். அப்படி நாம் விசுவாசித்திருக்கும் போது எரே 15:11 தீங்கின் காலத்திலும் உனக்காக நான் சத்துருக்களுக்கு எதிர்ப்பட்டு உனக்கு சகாயம் செய்வேன் என்று ஆண்டவர் சொல்கிறார்.

எரே 30:7-ல் யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம், ஆயினும் அவன் அதிலிருந்து மீள்வான் என்று வேதம் சொல்கிறது நாமும் எல்லா இக்கட்டிலிருந்தும் மீளுவோம் என்று ஆண்டவர் வாக்குக் கொடுத்திருக்கிறதை விசுவாசித்து ஆசீர்வதிக்கப்படுவோம். என் ஆண்டவர் தாமே இதை வாசிக்கிற உங்கள் வாழ்விலும் ஏற்படுகிற எல்லாவித இக்கட்டுகளிலும், இன்னல்களிலுமிருந்து நீங்கலாக்கி உங்களை மீட்டு இரட்சிப்பாராக!!.


அன்றன்றுள்ள அப்பம்
70வது திருப்பத்தூர்
பரிசுத்த உபவாச முகாம்
ஆகஸ்ட் செப்டம்பர்
31,1,2
வியாழன் வெள்ளி சனிக்கிழமை
இடம்
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம்
திருப்பத்தூர் மாவட்டம்
தொடர்புக்கு 996202777, 9962648777
BRO. L. VINCENT RAJ | PS. OSBORNE JEBADURAI | BRO. EBENEZER PAUL
BRO. GPS ROBINSON | PS. KALYAN KUMAR


மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும் இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரை
எழுப்புதல் உபவாச ஜெபம்
செப்டம்பர்
16
சனிக்கிழமை
@9:00am
Sis.Kala VincentRaj
Bro.L.Vincentraj
இடம் இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்,PRC Depot அருகில், மதுரை
தொடர்புக்கு 94428 00449, 94980 00449



# சாதிக்கலாம் நீ வா நண்பனே

சகோதரி. பிரேமாடேவிட்

செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்.
பிரசங்கி 9:10.

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, நம்முடைய பெலனாகவும், நம்மை பெலப்படுத்துகிறவராகவும் இருக்கிற நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். Army ஆண்ட்ரூ என்று, தன்னை அறிமுகப்படுத்தும் இந்த சகோதரனின் சாட்சி, உங்களையும் சாதிக்கத் தூண்டும் என நம்புகிறேன். அம்மா, அப்பா Divorce ஆனதால, அவருடைய சொந்த தகப்பனாலே கைவிடப்பட்டு சித்தப்பாவால் இவரும், இவருடைய தம்பியும் வளர்க்கப்பட்டார்கள். 13 வயது, 11 வயதுடைய இவர்களைப் பார்த்து எல்லோரும் சொன்னார்கள் மூத்தவன் ரீக்ஷா இழுப்பான், இளையவன் மூட்டை தூக்குவான் என்று. ஆனால் தாயும், தகப்பனும் கைவிட்டாலும், கைவிடாதப் பரம தகப்பன் அவர்கள் இருவருடைய கரங்களையும் பிடித்தார். அவர்கள் இருவருக்கும் பைபிள், வசனம், ஜெபம் என்று சொல்லிக் கொடுக்கப்பட்டதின்படி, அவர்கள் இருவரும் கர்த்தரில் நம்பிக்கை வைத்து வளர்ந்தார்கள். ஆண்ட்ரூ 7-ஆம் வகுப்பு முடித்ததும் சித்தப்பா அவனை Military போகச் சொல்லும் போது மியூஸிக்ல எனக்குக் கொஞ்சம் ஆர்வம் இருக்கிறது நான் அதைப் படிக்கப் போகிறேன் என்று அவன் கேட்ட போது இல்லை,

நீ Military தான் போக வேண்டும் என்று சித்தப்பா சொன்னதால, (இயேசப்பா நீங்க தான் எனக்கு உதவி செய்யனும் என்ற ஜெபத்தோடு) Military செலக்ஷன் நடக்கும் இடத்துக்குப் போனான். இதற்கு முன்னே எந்த விளையாட்டிற்கும் போனதில்ல, விளையாடினதும் இல்லை, முதன் முறையாக ஓட்டப்பந்தயம், 4 ரவுண்ட் ஓடனும், இயேசப்பா என்னோட நீங்க இருக்கீங்க ஓட உதவி செய்யுங்கப்பா என்ற ஜெபம் மனதில் ஓட கால்களும் ஓடுகிறது. இரண்டு ரவுண்ட் ஓடியாச்சு, நெஞ்செல்லாம் வலி எடுக்கிறது, இயேசுவே என்று கூப்பிட அடுத்து எப்படி நான்கு ரவுண்ட் ஓடினார் என்றே தெரியவில்லை. ஓட்டத்தில் பாஸ், ஏற்கனவே இரண்டு மூன்று முறை செலக்ஷன் வந்தவர்கள் கூட பாஸ் ஆகவில்லை. ஆனால் இவர் பாஸ். அடுத்து அடுத்து பல டெஸ்டிலும் பாஸ் ஆகி, மெடிக்கல் டெஸ்ட், எழுத்து தேர்வு என்று எல்லாவற்றிலும் அதிகாரிகளின் கண்களிலே தயவு கிடைத்து. Military-க்கு செலக்ட் ஆகி இன்றைக்கு உயர் ராணுவ அதிகாரியாக இருக்கிறார்.

தாய் தகப்பன் இல்லை, பெரிசா சொல்றதுக்கு நல்ல திறமை தாலந்து, படிப்பு, சாப்பாடு, டிரஸ் இல்லை. ஆனால் ஆண்டவரை நம்பி, அவர் கையைப் பிடித்துக் கொண்டு, வழி நடத்துகிறவர்களின் வார்த்தைகளைக் கேட்டு தனக்குக் கிடைத்ததை, தனக்கானதை முழுபலத்தோடு செய்தது தான், எந்த இடத்தில் நடுத்தெருவில் கைவிடப்பட்டார்களோ, அதே இடத்தில் இன்றைக்கு பல கோடிகளுக்கு அதிபதிகளாக கர்த்தர் அவர்களை உயர்த்தியிருக்கிறார். உணவுக்கு கஷ்டப்பட்டதாலே ஒரு ஹோட்டலும், டிரஸ்க்கு கஷ்டப்பட்டதாலே ஒரு ஷோ ரூம் உள்ளதாம். மூட்டை தூக்குவான் என்று சொல்லப்பட்ட தம்பி இன்று கனடாவில் ரூபாய் 7 லட்சம் சம்பளம் வாங்குகிறான், கர்த்தரின் நாமம் அவர்கள் மூலம் மகிமைப்படுகிறது.



## கர்த்தரை நம்புங்கள்

**கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள், கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார். ஏசாயா 26:4.** என்னத்தை நீ பெரிசா சாதிச்ச என்று உங்கள் மனசோ, பெற்றவங்களோ, பெரியவங்களோ சொல்லலாம். அவங்க அப்படிச் சொல்லிட்டாங்க, சொல்லிட்டாங்க என்று அதைக் குறித்துக் கவலைப்படாமல் ஆண்டவரே, எனக்கு உதவி செய்யுங்க, எனக்குத் திறமையில்ல, உங்க தயவினால மட்டும் தான் நான் முன்னேற முடியும், என்னைப் பலப்படுத்துங்க, ஞானம் தாங்க, நான் நல்லாப் படிக்கனும், எங்க கஷ்டம் தீரனும் என்று இயேசப்பாவிடம் கேட்க வேண்டும் சகோதரர் Army ஆண்டீரூவை விட நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

ஆனால் நீங்கள் கர்த்தரை மட்டுமே நம்ப வேண்டும். எல்லாத் திறமைகளும், வாய்ப்புகளும், வசதிகளும், பெற்றோருடைய ஆதரவும், அரவணைப்பும் இருப்பவர்கள் எல்லாம் சாதிப்பதில்லை. அதே நேரம் பெற்றோரின் அன்பும், அரவணைப்பும் இல்லாத, திறமையற்ற, பெலவீனமான, பணமில்லாத அநேகர் சாதிக்காமலுமில்லை. இந்த இரண்டில் நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும் இப்பொழுது இயேசுவை நம்புங்கள். உங்களுடைய சொந்த பெலத்தையோ, ஞானத்தையோ, யாரோ ஒருவரையோ நம்பாமல், என்றுமே மாறாதவராக, நம்மை, உங்களைக் கைவிடாதவராக, நமக்காக உயிரையே கொடுத்த இயேசுவை நம்புங்கள். சும்மா நம்பினால் எல்லாம் நடந்திராது. **உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். சங் 37:5.** அந்த இரண்டு சகோதரர்கள், அந்த இளம் வாலிப வயதில் தங்கள் இஷ்டப்படி வாழாமல் பைபிளும் கையுமாக இருந்து,

தங்கள் வாழ்க்கையை இயேசுவோடு சேர்ந்து வாழ, இயேசுவுக்காக ஒப்புவித்ததினால் இன்றைக்கு ஒரு சாதனையாளர்களாக உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். நீங்களும், கர்த்தருக்குப் பிரியமில்லாத வழிகளிலான உங்கள் மனசும், மாம்சமும் விரும்பினபடி வாழாமல் தீமையை வெறுத்து கர்த்தருக்குப் பயந்து, அவரை நம்பி வாழ்ந்து பாக்கியவான்களாயிருங்கள்

கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். சங் 128:1. கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். எரேமியா 17:7.

## கடினமாக உழையுங்கள்

ஜாக்கிரதையுள்ளவர்களுடைய கை ஆளுகை செய்யும் சோம்பேறியோ பகுதி கட்டுவான். நீதி 12:24. மற்றொரு மொழிபெயர்ப்பு கடினமாய் உழைக்கிறவன் தலைவனாவான், சோம்பேறி அடிமையாவான். நீதி 12:24

கர்த்தர் மேல் நம்பிக்கையை வைத்து, முழுபெலத்தோடு Fill Effort போட்டு, சோம்பலாய் இல்லாமல் கடினமாய் உழைக்கும் போது கர்த்தர் அதை ஆசீர்வதித்து, நல்ல சிறந்த பலனையும், பதில்களையும் உயர்வையும் தருகிறார். சிலர் சொல்லுகிறார்கள் நான் படிக்கிறேன், நான் உழைக்கிறேன் பின்னர் எதற்கு ஜெபம், சர்ச், கடவுள் உதவி என்கிறார்கள்.

ஐஸ்வரியத்தைச் சம்பாதிப்பதற்கு, படிப்பதற்கு பெலனை உனக்குக் கொடுக்கிறவர் அவர், (உபா 8:18) அவர் பெலப்படுத்தினால் மட்டுமே நம்மால் முடிந்த, முடியாத எல்லாம் செய்ய பெலன் கிடைக்கும். (பிலி 4:13). இன்னும் வேறு சிலர் கர்த்தர் எல்லாம் பார்த்துக் கொள்வார் என்றும் எந்த ஒரு முயற்சியும் செய்யாமல், அதான் எனக்கு ஒன்னும் வாய்க்கலயே என் தலையெழுத்து, என் மூஞ்சிக்கு யார் கொடுப்பா என்றும், சும்மா இருக்கிறார்கள். தவறை உணர்த்துவதற்காக? முயற்சி செய்து முன்னேற அறிவுரைகள் சொல்லப்படும் போது சிலர் கோபித்துக் கொண்டு சோர்ந்து போய் அவ்வளவு தான் இனிமேல் எல்லாம் என்னால் ஒன்றும் முடியாது என்றும், குடி, போதை, செல்போன், அரட்டை இவற்றில் நேரம் செலவழித்து எதிர்மறையாய் பேசிக் கொண்டும், செய்து கொண்டும் இருப்பார்கள்.


தாவீதைப் பாருங்கள் (1 சாமு 17:1-53) பெற்றோரால் புறக்கணிக்கப்பட்டவராக (சங் 27:10) சகோதரர்களால் அற்பமாக எண்ணப் பட்டவராக இருந்தார். தாவீதை அபிஷேகம் பண்ண சாமுவேல் அவர்கள் வீட்டிற்கு வருகிறார். பெரிய விருந்து ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிறது. ஆனால் தாவீதை யாரும் கூப்பிடவில்லை.





சகோதரர்கள் எல்லாரும் ராணுவப்பணியில் இருந்தார்கள். இவரோ வீட்டை விட்டு தூரமான, வனாந்திரமான இடத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தார். வசதிகள் இல்லை, சரியான சாப்பாடும் இல்லை. தூக்கம் இருந்திருக்காது. ஆனாலும் பிரபுக்களை, மனுஷரை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தரை நம்புவதே நலம். சங் 118:8,9,

என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும் கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்வார் (சங் 27:10) என் பெலனாகிய கர்த்தரில் அன்பு கூருவேன் (சங் 18:1) கர்த்தரைத் தேடும் எனக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது. (சங் 34:10) என்று பாடித்துதித்துக் கொண்டிருந்த தாவீதோ, தனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை கர்த்தரை நம்பி முழு பலத்தோடு, கருத்தோடு செய்கிறார். ஆட்டுக்குட்டியை பட்சிக்க கரடியும், சிங்கமும் வந்த போது அதை அவைகளின் வாயில் மாட்டிக் கொள்ளாதவாறு கடினமாய் முயற்சி செய்து பாதுகாத்தார். யுத்த களத்திலிருந்த சகோதரர்களுக்கு உணவு கொடுத்து வருமாறு அவர் தந்தை சொன்ன போது ஆடுகளை காவலாளி வசம் பத்திரமாய் ஒப்புவித்து வருகிறதைப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல யுத்த களத்திற்கு சென்ற போது கோலியாத்தின் கோஷங்களை 40 நாட்களாக தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிற சவுல் ராஜாவும், ராணுவ வீரர்களும் கலங்கிப் பயந்து கொண்டு இருக்கிறார்களே, இங்கே நான் வந்ததற்கு ஏதாவது ஒரு நோக்கம் இருக்க வேண்டுமே, ஏதாவது செய்து ஜனங்களை காப்பாற்ற வேண்டும், அவனை ஜெயிக்க வேண்டும், சாதிக்க வேண்டும் என்று அங்கேயும்,இங்கேயும் ஓடி விசாரித்து, துணிச்சலாய் சவுல் ராஜாவிடம் சென்று, தைரியமாய் நான் போகிறேன் என்று அனுமதி பெற்று, தன் உயிரை கூட பொருட்படுத்தாமல், எந்த ஆயுதமும் அணியாமல், அதே நேரம் கர்த்தரை நம்பி உம்மாலே ஒரு மதிலைத் தாண்டுவேன் (சங் 18:29) என்று சொல்லி கோலியாத்தை ஜெயித்தான். அவன் ஒருவன் கர்த்தர் மேல் வைத்த நம்பிக்கை, அவனது கடின உழைப்பு வீண் போகவில்லை. நீதி 23:18 கர்த்தரை நம்பி முழு முயற்சி, சாதனை செய்து தாவீது தலைவ னானான்.



இங்கிலாந்தில் செருப்பு தைத்த வில்லியம் கேரி இயேசுவின் அன்பினால் இந்தியா வந்து நம்பிக்கை யோடு ஊழியம் செய்தார். 44 இந்திய மொழிகளில் புதிய ஏற்பாட்டை 8 மொழிகளில் முழு வேதாகமத்தையும் மொழி பெயர்த்தார். செராம்பூர் யூனிவர் சிட்டியை உருவாக்கினார். சுவிசேஷப் பணியையும், சமுதாயப்பணியையும் செய்து சாதனை படைத்துள்ளார். அவர் கூறியுள்ளார் தேவனிடத்தில் பெரிய காரியங்களை எதிர்பாருங்கள், தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்ய முயற்சி செய்யுங்கள். கர்த்தரை நம்பி, முழு முயற்சி செய்து கடினமாய் உழைக்க, சாதனை படைக்க பெலப்படுத்தும் கிறிஸ்து தாமே உங்களைப் பெலப்படுத்தி வழி நடத்துவாராக. ஆமென்.

# அலெக்ஸ் சார் கிளாஸ்

ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா,

அலெக்ஸ் சார் கிளாஸ்க்கு மட்டும் நான் போகவே கூடாதுன்னு வேண்டிக்கிட்டே..... இருந்தான் பாபு. பாவம் பாபு 4-ஆம் வகுப்பிலிருந்து 5-ஆம் வகுப்புக்கு அலெக்ஸ் சார் கிளாஸ்க்குத் தான் போனான். அலெக்ஸ் சார் ரொம்ப கண்டிப்பானவர். சார் அடி கொடுத்தால் வலி மறைய நாளாகும்னு நிறைய பேர் சொன்னதை அவன் கேட்டிருக்கிறான். அதனால அவனுக்கு அலெக்ஸ் சார்னா அவ்வளவு பயம். இப்ப வேற வழியில்லை, ஐந்தாம் வகுப்பிலே அலெக்ஸ் சார் கிளாஸ்ல தான் பாபு இருக்கிறான். ஆரம்பத்தில் அவருடைய அரட்டல்களும், அடிகளும் பாபுவுக்கு கொஞ்சம் பயத்தையும், வெறுப்பையும் தந்தது. ஆனா இப்ப பாபு பயம் நீங்கிக் கொஞ்சம் சந்தோஷமாயிட்டான் ஏன் தெரியுமா? பாபு சார் கிட்ட மாட்டிக்க கூடாதுன்னு **Correct** - டா **Homework** செஞ்சிட்டே வந்ததால **Class Leader** ஆயிட்டான். அப்புறம் என்ன? அலெக்ஸ் சார், பாபு **Staff Room**-க்கு போய் இதை வச்சிட்டு வா, **Headmaster Room**-க்கு போய் இதை கொடுத்துட்டு வான்னு எல்லா வேலைகளையும் செய்ய அவனைத் தான் அனுப்புவார். பாபு நல்ல மார்க் வாங்க ஆரம்பிச்சிட்டான். இப்ப அடியும் இல்லை, பயமும் இல்லை. ஒருமுறை பள்ளியில் கையெழுத்துப் போட்டி நடந்தது. எல்லாப் பையன்களும் ஒரு பக்கம் எழுதிக் கொடுத்தார்கள், பாபுவும் எழுதிக் கொடுத்தான். அவங்க கிளாஸ்ல பாலாஜி தான் அழகாக எழுதுவான். ஆனால் பாபுவுக்கு பரிசு கிடைத்தது. அலெக்ஸ் சாரே வேண்டாம்னு நினைச்சேன். ஆனா அவர் கிளாஸ்க்கு வந்ததால் தான் நான் நல்ல மார்க் வாங்கவும், பரிசு வாங்கவும் முடிஞ்சிருக்கு. அடிவாங்களைன்னா நான் நல்ல பையனாக, **Leader** வந்திருக்க முடியாதுன்னு புரிஞ்சுகிட்ட பாபு, இப்ப அலெக்ஸ் சார் கிளாஸ்க்கு வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி சொன்னான்.



என்ன குட்டீஸ் நீங்களும் பாபு மாதிரி தானா ஆசிரியர்கள், பெரியோர்களின் கண்டிப்பு உங்களுக்கு நல்லது. அப்பொழுது தான் கவனமாக, கருத்தாக படிக்கவும், நல்லப் பிள்ளைகளாய் வளரவும் முடியும். இந்த அடி, திட்டு எல்லாம் நீங்க பெரிய பிள்ளைகளாகும் போது உங்களுக்கு நல்லது தான்னு தோணும், எனவே பயப்படாதீங்க, வெறுப்பாக இருக்காதீங்க, சந்தோஷமாக ஸ்கூலுக்குப் போறீங்க, ஆசிரியர்களை மதித்து, கீழ்ப்படிந்து நடக்க மறந்துறாதீங்க. ஓகே பாய்.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா எங்களுடைய ஆசிரியர்களுக்காக, ஸ்கூலுக்காக நன்றி இயேசப்பா. எங்களுடைய நன்மைக்காக, அவர்கள் கண்டிக்கும் போது பயப்படாமலும், வெறுப்படையாமலும் இருக்க, நன்றாகப் படிக்க உதவி செய்யுங்க. ஸ்கூலுக்கு வராமல் இருக்கிற பிள்ளைகள் ஸ்கூலுக்கு வர உதவி செய்யுங்க இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாடவசனம்

எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும், ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். எபிரெயர் 12:11.



**சாட்சி பகுதி**

# திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பன் (இயேசு) செய்த நன்மைகள்



**சகோதரி. நகோமி — ஒட்டன்சத்திரம்**

எங்கள் சபையில் நடைபெற்ற கூட்டத்திற்கு சகோதரர். வின்சென்ட்ராஜ் அவர்களும், , சகோதரி. கலா வின்சென்ட்ராஜ் அவர்களும் தேவசெய்தி கொடுக்க வந்திருந்தார்கள். சில நாட்களாக எனக்கு ஒரு கையும், காலும் மிகுந்த வலிவேதனையாக இருந்தது. என் அம்மாவும் அதிகமான பெலவீனத்தால் கஷ்டப்பட்டார்கள். அவர்களை நான் தான் பார்த்துக் கொண்டிருந்தேன். எப்படியாகிலும் கூட்டத்திற்கு செல்ல வேண்டும், அம்மாவை யார் பார்த்துக் கொள்வார்கள் என்று கவலைப்பட்டேன். அம்மாவை தனியாக விட்டுவிட்டு வந்து கூட்டத்தில் அழுதேன் இயேசப்பா என்னை விசாரிக்க, என் மீது அன்பு கூர யாருமே இல்லை என்று நான் அழுது கொண்டிருந்தேன். அப்பொழுது சகோதரர் யோசேப்பைப் பற்றி சொன்னார்கள் விசாரிக்கிற தேவன் இருக்கிறார். உன்னை விசாரிக்க, உன் மீது அன்பு கூர யாருமே இல்லை என்று அழுகிற சகோதரியே, நீ வந்த நேரத்திலிருந்து அழுகிறாய் கர்த்தர் உனக்கு இருக்கிறார் என்று சொன்னார்கள், அந்த வார்த்தையின் மூலம் தேவன் என்னோடு பேசினார். முதிர்வயதில் உள்ளவர்களையும் தேவன் விசாரிப்பார், சுகம் தருவார் என்று சொன்னார்கள். அன்று அந்த கூட்டத்திலேயே என் கைவலி, கால்வலி சுகமானது, இப்பொழுது என் அம்மாவும் நல்ல சுகத்தோடு இருக்கிறார்கள்.
இயேசப்பாவிற்கு ஸ்தோத்திரம்.

**சகோதரர். சின்ராஜ் — பொருளூர்**

என் தங்கையின் கணவர் எனக்கு வானத்தின் வாசல் எழுப்புதல் உபவாச ஜெபத்தைக் குறித்து அறிமுகப்படுத்தி வரச் சொன்னார். நானும் கடந்த மாதத்தில் கூட்டத்திற்கு வந்தேன். நாங்கள் எங்கள் வீட்டிற்கு குடிவந்து 12 வருடமாகிறது. எல்லா இடங்களிலும் ரோடு போட்டார்கள் எங்க இடத்தில் ரோடு இல்லாததால் மழை வந்தால் தண்ணீர் நிறைய நிற்கும். நாங்கள் அந்த தண்ணிக்குள்ளாக நடந்து தான் எங்க வீட்டிற்குச் செல்ல வேண்டும். எங்களைப் பார்த்து மற்றவர்கள் பரியாசம் செய்யும் நிலையில் தான் இருந்தோம். கடந்த மாதம் ஜெபத்திற்கு வந்து இயேசப்பா நான் இந்த இடத்தில் சாட்சி சொல்ல வேண்டும் எங்க பாதையில் ரோடு போட வேண்டும் என்று ஜெபித்து விட்டுச் சென்றேன். கூட்டம் முடித்து போன அன்றைக்கே தேவன் ரோடு போட தேவையான மண்ணைக் கொண்டு வரவும், ரோடு போடவும் தேவன் அற்புதம் செய்தார். பிள்ளைகள் நன்றாக படித்து முடிக்கவும், நல்ல வேலை கிடைக்கவும் தேவன் கிருபை செய்தார். நாங்கள் வானத்தின் வாசல் ஜெபத்திற்கு வந்து நிறைய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள் தேவை

இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site
**MANAGER - MEDIA OPERATIONS**
Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid
**GRAPHIC DESIGNER**
Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid
**CONTENT WRITER**
Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site
**PROGRAM PRODUCER / DIRECTOR**
Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knoweldge in Target Audience is a must.

#Hybrid
**VIDEO EDITOR**
Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site
**SOUND ENGINEEER**
Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid
**MOTION GRAPHICS DESIGNER**
Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site
**CAMERAMAN**
Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site
**PHOTOGRAPHER**
Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/
OR
Email : connect@dprince.in
OR
Whatsapp : +91 7825 04 7825
OR
Whatsapp : +91 9498 00 0449

* Any UG/PG Candidates with respective Skill
* Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
* Experienced Staffs will be given Good Remuneration.
* Food And Accomodation will be provided.
* Male & Female can Apply.
* Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

## இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

### 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

### 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

### 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

### 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

### 5) மணியார்டர்(E.M.O) :

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# நடப்பு செய்திகள்

## உலகில் மிக நீண்ட ஆயுளை கொண்ட மனிதர்கள் வாழும் அதிசய தீவு!

உலகில் வேறு எங்கேயும் இருப்பதைவிட ஒக்கினாவா தீவில் தான் நூறு வயதை தாண்டிய மக்கள் அதிக அளவில் வாழ்கின்றனர். மனிதர்களின் ஆயுட்காலத்தின், அவர்களின் வாழ்வியலை பொறுத்து மாறிக் கொண்டே இருக்கும். கடந்த 50 ஆண்டுகளில் இருந்ததை விட, தற்போது ஒரு மனிதனின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்து உள்ளது என்று சமீபத்திய அறிக்கைகளில் தெரிய வந்துள்ளது. கடந்த 1960 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அளித்த தரவில் அப்போதைய மனிதனின் சராசரி ஆயுட்காலம் 52 ஆகும். தற்போது அது 72 ஆக அதிகரித்துள்ளது. ஆனால் இதற்கு முன்னர் இருந்த யுகத்தைப் போலவே, தற்போதும் உலகில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் வாழும் மக்கள் அதிக ஆரோக்கியத்துடனும், அதிக அளவிலான சராசரி ஆயுட்காலத்தையும் கொண்டிருக்கிறார்கள் என்றால் உங்களால் நம்ப முடியுமா? ஆம்! ஜப்பானில் உள்ள ஒகினாவா தீவு “மரணமில்லாதவர்கள் வாழும் இடம்” அல்லது “அமரர்கள் வாழும் தீவு” என அழைக்கப்படுகிறது. ஜப்பான் மற்றும் தைவானுக்கு இடைப்பட்ட பகுதியில் இந்த தீவு அமைந்துள்ளது.

உலகில் அதிக ஆயுட்காலத்துடன், ஆரோக்கியமான மனிதர்கள் வாழும் பகுதி “ப்ளூ சோன்” என அழைக்கப்படுகிறது. உலகில் மொத்தம் உள்ள ஐந்து “ப்ளூ சோன்” களில் ஜப்பானின் இந்த ஒகினாவா தீவும் ஒன்றாகும். உலகில் வேறு எங்கேயும் இருப்பதைவிட ஒக்கினாவா தீவில் தான் நூறு வயதை தாண்டிய மக்கள் அதிக அளவில் வாழ்கின்றனர். 2020 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்த தீவில் வாழும் பெண்களின் சராசரி ஆயுட்காலம் 87.44 ஆண்டுகளாகும். ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 80.27 ஆண்டுகளாகும். யுட்யூப் பிளாகர் ஆன ட்ரு பின்ஸ்கி என்பவர் இந்த தீவிற்கு சென்று, இந்த தீவை பற்றிய பல்வேறு ரகசியங்களை வெளியுலத்திற்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார். இந்த தீவில் வாழும் மக்கள் தங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கு எப்போதும் ஏதாவது ஒரு வேலையை செய்து கொண்டே இருப்பது தான் ரகசியம் என்று கூறியுள்ளனர். மேலும் அவர்கள் வீட்டிற்குள்ளேயே இருந்தாலும், இங்கும் அங்கும் நகர்ந்து கொண்டே இருப்பார்களாம் இதுதான் அவர்களின் நீண்ட ஆயுளுக்கான ரகசியமாம். மேலும் அங்கு வாழும் மக்களின் உணவு முறையும் அவர்களின் நீண்ட கால ஆயுளுக்கான ரகசியமாக உள்ளது. கடற்பாசி, பச்சை காய்கறிகள் மற்றும் இறைச்சி ஆகியவை இவர்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதாக ட்ரூ கூறியுள்ளார்.

“என் பிள்ளைகள் ஒலிவமர கன்றுகள்”

# “என் பிள்ளைகள்” ஆசீர்வாத ஜெப திட்டம்





- உங்கள் பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காக, தேவ பாதுகாப்பிற்காக, படிப்பிற்காக, சுகத்திற்காக அனுதின பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்
- உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காலத்தை குறித்த கலக்கம் மற்றும் பயம் நீங்க.
- அவர்களை குறித்த தேவ திட்டம் நிறைவேற.
- இன்றே இணைந்திடுங்கள் ! (வயது வரம்பு 24 வரை)

**உங்கள் பிள்ளைகளின் விண்ணப்பங்களுக்காக அனுதினமும் பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.**

இத்திட்டத்தில் இணைந்திட அழையுங்கள் 94428 00449, 94428 00447

WHATSAPP மூலம் இணைய 94980 00449

இணையதளம் மூலமாக இணைந்திட jesuslives.in/resources

# நம்பிக்கையின் இரவு
# NIGHT OF HOPE





**Bro.L.Vincentraj** — **Sis.Kala VincentRaj**

**ஆகஸ்ட் 31** இரவு 10.30 மணி முதல் 12.30 மணி வரை

**செப்டம்பர் 30** இரவு 10.30 மணி முதல் 12.30 மணி வரை

## புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்

உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்.
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்

அனுப்ப வேண்டிய எண்
**944 28 00 449**

நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது